<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>

**அசல் வழக்கு எண். 92 /2019 வா.சா.1**

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ம் நாள் திங்கள்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: பழனிச்சாமி தந்தை பெயர்: வெள்ளைச்சாமி

-----------------------------------------------------------------------

<u>09.03.2026:</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி:</u>

1. 2ம் பிரதிவாதி சேக்குன் அப்பா பெயர் சேதுராமன் ஆகும் . எனது அண்ணன் மனைவி பழனியம்மாள் திருப்பதி இராஜா அவர்களுக்கு சொத்தை கிரையம் செய்துள்ளாரா என்றால் கிரையம் செய்துள்ளார். (**மேற்படி பழனியம்மாள் கிரையம் செய்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** நானும், எனது மூத்த அண்ணி புஸ்பமும் சேர்ந்து ஒரு சொத்தை கிரையம் செய்துள்ளோம். **(அந்த சொத்தின் கிரையப்பத்திர சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. எனது அம்மாவின் அப்பா பெயர் சேவூகன் என்றால் சரிதான் . சேவூகனின் வாரிசு பழனியம்மாள்,அழகம்மாள், சேதுராமன், இலட்சுமணன் ஆகும். மேற்படி குடும்பம் ஒற்றுமையாகத்தான் இருந்தார்கள் . எனது அம்மா பழனியம்மாள் குடும்ப மூத்த உறுப்பினராக இருந்து குடும்பத்தை நிர்வாகம் செய்தார் . குடும்பத்தை நிர்வாகம் செய்தததால் வருவாய் துறை ஆவணங்களில் பழனியம்மாள் பெயரில் ஏற்பட்டது என்றால் சரிதான்.

3. 1983ம் வருடம் பாகப்பிரிவினைக்கு பின் இலட்சுமணன் என்பவர் தனியாக வரவு செலவுகளை பார்த்து வந்தார் . லெட்சுமணனை தவிர மற்ற அனைவரும் ஒற்றுமையாக இருந்ததார்கள் என்றால் சரிதான் . சேதுராமன் தன்னுடைய மகள் பழனியம்மாளை, அக்கா பழனியம்மாள் மகன் அழகுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். அழகு 1983ம் வருடம் இறந்து விட்டார். எனது அம்மா பழனியம்மாள் தனது மருமகள் பழனியம்மாளுக்கு சீதனமாக சொத்து கொடுத்தார் என்றால் சரிதான்.

4. எனது தந்தை வெள்ளைச்சாமி சொத்துக்களை நாங்கள் பெற்று கொண்டதற்கு கரமால் நோட்டு உள்ளதா என்றால் இருந்தது தற்போது எங்கு உள்ளது என்று தெரியாது. பஞ்சாயத்தாரராக சேதுராமன் இருந்ததாரா என்றால் ஞாபகமில்லை .

பஞ்சாயத்தாரராக சேதுராமன் இருந்து சொத்துக்களை ஒதுக்கி தந்தார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. தாவாச் சொத்திற்குரிய மின்சாரம் இலவச மின்சாரமா என்றால் சரிதான். இந்த வழக்கை 08.10.2013 அன்று தாக்கல் செய்தேன் . தாவாச் சொத்திற்குரிய மின்சாரம் 08.08.2013 ம்தேதியன்று மின்சாரம் வழங்கப்பட்ட பின்பு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு பின்னர் அ .வ.எண் 105/2019 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . மேற்படி வழக்கில் பாகப்பிரிவினை மற்றும் எனது அண்ணன் மனைவி ஏற்படுத்திய கிரையப்பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

6. தாவாச் சொத்து மேற்படி அசல் வழக்கில் 2 வது சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . 3, 4 வாதிகள் 2ம் பிரதிவாதி பழனியம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான் . அங்கயற்கண்ணி தனது அம்மா பழனியம்மாள், சேக்குக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என பரிகாரம் கோரி அசல் வழக்கு 104/2019 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் மேற்படி இரு வழக்குகள் குறித்ததான விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். அங்கயற்கண்ணி தாக்கல் செய்த வழக்கிலும் இவ்வழக்கு விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. சேக்கு தன் மகன் கனகாசபாபதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . மின்சாரம் தாவாச் சொத்திற்கு சரியான ஆய்வு செய்து வழங்கப்பட்டுள்ளது என்றாலும் , வழங்கப்பட்ட மின்சார இணைப்பை திருப்ப பெற்றுக்கொள்ள வழக்கு தாக்கல் செய்ய முகாந்திரமில்லை என்றாலும் நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதுதல்ல என்றால் சரியல்ல.

<u>4, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

8. தாவாச் சொத்திற்கான மின்சாரத்தை துண்டிக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மின்சார இணைப்பு எண் 144 ஆகும். மின்சார இணைப்பு வழங்கப்பட்ட சர்வே எண் 278/2 லிருந்து 276/15 க்கு மாற்றப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்கள் உள்ள சொத்து எனது தாயார் பெயரில் இருந்தது . மின்சார இணைப்பு வழங்கப்பட்ட போது கனகசபாபதி பெயரில் இருந்தது . சர்வே எண் 278/2 லிருந்து 276/15 க்கு

மின்சாரம் மாற்றுவதற்கு மின்வாரியத்திற்கு மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மின்சார இணைப்பு மாற்றம் செய்யக்கூடாது என்று நான் ஆட்சேபணை தெரிவித்தேன்.

9. மின்சார வாரியத்தில் தாவாச் சொத்தின் உரிமையை காண்பிக்க ஆவணங்கள் நாங்கள் தாக்கல் செய்யவில்லை . ஆவணங்களை தாக்கல்செய்ய சொல்லி மின்சார வாரியத்திலிருந்து எனக்கு அழைப்பானை வந்தது . ஆனால் மின்சாரம் இணைப்பு வழங்கிய பின்னர் வந்தது. வருவாய் ஆவணங்கள் இருந்தால் தாக்கல் செய்யும் படி அழைப்பானை வழங்கியிருந்தார்கள். எனது பெயரில் இருந்ததற்கான ஆவணங்களை நான் மின்சார வாரியத்தில் தாக்கல் செய்யவில்லை.

10. 17.03.2013 ல் கனகசபாபதி உரிய கட்டணம் செலுத்தி பிரதிவாதிகளிடம் மனு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் எனது பெயரில் மின்இணைப்போ , வருவாய் ஆவணங்களோ எதுவும் தாக்கல் செய்யாததால் 4ம் பிரதிவாதி உரிய மேல் அதிகாரிகளிடம் உத்தரவு பெற்று அதற்கான கட்டணம் ரூ .18,655/- செலுத்தியதின் பெயரில் மின்கம்பங்கள் உன்றபட்டு 08.08.2013ம் தேதி மின்சார இணைப்பு வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல . தாவா மின் இணைப்பு சம்மந்தமாக எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் நான் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . தாவா வழக்கு பரிகாரம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.